දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - බදුල්ල
மாவட்ட செயலகம் - பதுளை
District Secretariat - Badulla



2023 වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

பதுளை மாவட்ட செயலாளரின் வாழ்த்து செய்தி

"சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய முப்பரிமாணங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் நீண்ட கால, நிலையான மற்றும் வளமான சமூகமொன்றுகட்டியெழுப்பப்படும். .....



ஒரு வினைத்திறனான பொருளாதார , சமூக உட்கட்டமைப்பு மற்றும் வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்பு ஆகியவை உயர் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்துவதற்கும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் ஒரு முக்கிய தேவையாக இருக்கின்றன.இலங்கையின் பொருளாதாரத்தில் இதுவரை காலமும் மிகவும் கடினமான காலகட்டமாக இருந்த கடந்த ஆண்டில், அரசாங்கம் வழங்கிய கொள்கைநடைமுறைகளைச் செயற்படுத்துவதற்கு பதுளை மாவட்டத்தில் நல்லதொரு ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதார நிலைமையையும் , விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களையும் கொண்ட மாவட்டமாக பதுளை மாவட்டத்தில் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளின் அளவிலும்மற்றும் தரத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

இதனடிப்படையில் 2023 ஆம் ஆண்டுபல்வேறு பொருளாதார நெருக்கடிகளின் மத்தியிலும் அரச தலையீட்டின் காரணமாக பல்வேறு பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கி தன்னிறைவு பெற்ற நாட்டை உருவாக்க தடைகளை தாண்டி சவால்களை வென்று அரச சேவையில் உச்ச பங்களிப்பை வழங்கிய ஆண்டாக குறிப்பிடப்பட முடியும்.

மாவட்டம் என்ற ரீதியில் , பதுளை மாவட்டமும்நாட்டின்பொருளாதார சவால்களை எதிர்கொண்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில், 15 பிரதேச செயலகப் பிரிவுகளில், செழுமையான கிராமிய வேலைத்திட்டம், உணவுப் பாதுகாப்புத் திட்டம் , உலக உணவுத் திட்டம் , சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம்மற்றும் குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் போன்றவற்றின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குதொடர்ச்சியான பங்களிப்பை வழங்க முடிந்தது.

மேலும், பதுளை மாவட்டத்தில் அனைத்து கிராம உத்தியோகத்தர்களின் களங்களையும் உள்ளடக்கி அனர்த்த அபாயத்தைக் குறைப்பதற்கான சிரமதானங்களை அமுல்படுத்துதல் என்றதொனிப்பொருளின் கீழ், கிராம சமூகம், அரசு, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து சமூகப் பங்களிப்பின் அடிப்படையில் திட்டங்களை முன்னெடுத்து, மாவட்ட மக்களின் நலனுக்காக பணம் செலவழிக்காமல் சமூகத்தின் பங்களிப்பு மூலம் பல கிராமியரீதியிலான கருத்திட்டங்களை செயல்படுத்த வாய்ப்புகள் கிடைத்தன.

தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியிலும், தேசிய வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் கணிசமான அளவில் பங்களிக்க முடிந்ததை ஒரு வெற்றியாக கருதுவதோடு,மேலும் தற்போதுள்ள பௌதீக மற்றும் மனித வளங்களை முறையாக நிர்வகித்து, விவசாயம் மற்றும் தொழில்துறையின் புத்தாக்கதின் ஊடாக நவீன அறிவை சமூகமயமாக்கி 2023 ஆம் ஆண்டில் கூட்டு முயற்சியில் கடமைகளை மேற்கொண்டமை இந்த வெற்றிகளுக்கு பலமாக அமைந்தது.

2023 ஆம் ஆண்டிற்கான நிதித் தகவல்கள் மற்றும் செயலாற்றுகை விவரங்களை உள்ளடக்கி நிதி ஒழுங்கு விதி 402 இன் படி இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட "செயலாற்றுகை அறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள் 2023 அறிக்கை" மூலம் மாவட்டம் என்ற ரீதியில் எமது முன்னேற்றம் , ஆற்றல்கள்,முகங்கொடுத்த சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பான விரிவான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பண்டுக ஸ்ரீ பிரபாத் அபேவர்தன,
மாவட்ட செயலாளர்/அரச அதிபர்,
பதுளை.

2023 ஆம் ஆண்டுக்கான

வருடாந்தசெயலாற்றுகை அறிக்கை

மாவட்ட செயலகம் - பதுளை

செலவு தலைப்பு - 276

உள்ளடக்கம்

அத்தியாயம் 01– நிறுவனத்தின் விபரம்.'. நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிசெயலாற்றுகை

அத்தியாயம் 04– செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05–பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06– மனிதவள விபரம்

அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை

விபரம் **பக்க எண்**

01 அத்தியாயம் **01**

நிர்வாக துறை சுயவிவரம்/ செயல்படுத்தல் சுருக்கம்

1.1 அறிமுகம் 02
1.2 நிருவனம் சார் இலக்கு / நோக்கம் / பார்வை 15
1.3 பிரதான செயற்பாடுகள் 16
1.4 நிருவன விளக்கப்படம் 18
1.5 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள் 19
1.6 மாவட்ட செயலகப்பிரிவின் கீழான நிறுவன நிதி 19

02 அத்தியாயம் **20**

முன்னேற்றம் மற்றும் இலக்கு

2.1 தேர்ச்சி 21
2.2 வெற்றிகள் 25
2.3 சவால்கள் 26
2.4 எதிர்கால இலக்கு 26

03 அத்தியாயம் **27**

ஆண்டின் மொத்த நிதி சார் செயல்திறன்

3.1 நிதி செயலாற்றுகை கூற்று 28
3.2 நிதி நிலைமைக் கூற்று 29
3.3 நிதி கிடைப்பனவு தொடர்பான கூற்று 30
3.4 நிதிவெளிப்படுத்தல் குறிப்புகள் 31
3.5 வருவாய் வசூலித்தல் தொடர்பிலான வினைத்திறன் 53
3.6 ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதற்கான செயல்திறன் 55
3.7 நி.பி. 208 இன் அடிப்படையில் வேறு அமைச்சு மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் மாவட்ட செயலக காரியாலயத்தின் நிதி ஒதுக்கீடு 56
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கை செயல்திறன் 58
3.9 கணக்காய்வாளரின் அறிக்கை 58

04 அத்தியாயம் **59**

வினைத்திறன் நோக்கு

4.1 நிறுவனத்தின் வினைத்திறன்
(செயல் திட்டத்தின் அடிப்படையில்) 60

விபரம் **பக்க எண்**

05 அத்தியாயம் **61**
நிலைபேண் அபிவிருத்தியின் இலக்குகள் (SDG)சாதனையின் செயல்திறன்

5.1 அடையாளம் காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகள் 62

5.2 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் உள்ள சவால்கள் 63

06 அத்தியாயம் **64**
மனித வளப் பிரிவு

6.1 பணியாளர் புள்ளிவிவர முகாமைத்துவம் 65

6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அமைப்பின் செயல் திறனை பாதித்துள்ள விதம் 65

6.3 மனித வள அபிவிருத்தி 66

07 அத்தியாயம் **68**
இணக்க அறிக்கை

7.1 இணக்க அறிக்கை 69

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப்பொழிப்பு

1.1 அறிமுகம்

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்

1.3 பிரதான செயற்பாடுகள்

1.4 நிறுவன விளக்கப்படம்

1.5 மாவட்டசெயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலக நிதியங்கள்

1.6 மாவட்ட செயலக நிறுவன நிதியம்

1.1 அறிமுகம்

பதுளை மாவட்டத்தின் வரலாற்றின் சிறு துளி

பெருமைக்குரியவரலாறுயுகம் வரைஓடும் வரலாற்றிற்குஉரிமைகோரும் பதுளைமாவட்டத்தின் வரலாற்றினைஆராயும் போதுகம்பீரமாகதோன்றுவதுவிஜயனின் வருகைக்குமுன் அரசவியூகத்துடனானவளர்ச்சியுற்ற ஓரு தொகுதிமக்கள் வாழ்ந்தமாவட்டம் என்றவகையில் ஆகும். இராவணாஎல்லபிரதேசத்தில் இற்றைக்கு 6000 வருடங்களுக்குமுன் அதாவது கி.மு.1800 – 1900 க்குமுன் தமதுசொந்தபூமியாககொண்டுஅரசபரிபாலனம் செய்ததாகசெவிவழிக் கதையாகவரும் இராவணமன்னன் தொடர்பானவரலாற்றுபுராணக் கதைகளைஆராய்கின்றபோதுஉறுதிப்படுத்தப்படும் பலசான்றுகள் இந்திய இலக்கியவரலாற்றில் காணக்கிடைக்கின்றது. வால்மீகிமுனிவரால் இயற்றப்பட்ட இராமயணம் இராவணனனை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட காவியமாகும். அத்தோடு இராவணன் வீணைஎன்னும் சங்கீதகருவியும் இருந்துள்ளது. மத்தியசீலாயுகத்தின் காலத்தில் இருந்தேஊவாவில் மனிதர்களின் குடியிருப்பு இருந்துள்ளமைதொடர்பாகதிரு. பி.ஈ.பி.தெரனியகலஅவர்களின்ஆராய்ச்சியில் இருந்துகண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

புராதனவரலாற்றில் இன்னும் பின் நோக்கிபார்க்கும் போதுமத்தியசீலாயுகம் தொடர்பாகஅத்தாட்சிபதுளைமாவட்டத்தில்,பண்டாரவளைக்குஅருகில் உள்ளமலைஉச்சிகள் சிலவற்றில் கிடைத்துள்ளது. மத்தியசீலாயுகத்தில் சொல்லப்பட்டுள்ளமைக்ரோலிதசீலாசுவடிகள் பண்டாரவளைதொடக்கம் வெளிமடைவீதியில் அமைந்துள்ளஎன்கிலின் தேவாலயம் இருக்கும் இடத்தில் கிடைத்துள்ளது. பதுளைமாவட்டத்தில் தொன்மையானமக்கள் குடியிருப்புதொடர்பாகமுக்கியமானசாட்சியாக இருப்பதுபுத்தபிரான் கி.மு.06ம் நூற்றாண்டில் ஞானம் பெற்று 09 வதுதைமாதத்திலிருத்து முழு நோன்மதிதினம் மகாவலிஆற்றோரத்தில் தனதுகுடியிருப்பைஅமைத்துக் கொண்டு இயக்கவம்சத்தினர் வாழ்ந்ததற்போதுமஹியங்கனை விகாரைஅமைந்துள்ள இடத்திற்குவருகைதந்தமையாகும்.

இதுபுத்தபிரானின் முதலாவதுவருகையாக இருப்பதும் விசேடகாரணமாகும். புத்தபிரானின் உபதேசத்தினைகேட்டசுமனஎன்னும் மக்களின் தலைவன் புத்தபிரானிடம் வழிபடுவதற்காகஏதேனும் ஒன்றைகேட்டபோதுஅவரின் கேசத்தின் சிறிதளவைபுத்தபிரான் வழங்கியுள்ளார். அத்தாதுக்களைவைத்துசுமனசமன் என்னும் மக்கள் தலைவனால் நிர்மானிக்கப்பட்ட தூபியானது காலங்காலமாகபுனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அதுதற்போதையமஹியங்கனைவிகாரைஎனவரலாற்றில் கூறப்பட்டுள்ளது.துாகபைஒன்றைநிர்மானிக்கக்கூடியகலைதிறமையுள்ளவளர்சியுற்ற சமூகமுறைமை இருந்தமையில் இருந்துதெரியவருவதுஎன்னவென்றால் புத்தபெருமானின் காலத்திலும் இப்பிரதேசம் வளர்சியுற்றநிலையில் இருந்தபிரதேசம் என்பதாகும். சுமனசமன் என்னும் பெயரில் இருந்தமக்கள் தலைவன் சுமனசமன் தேவன் எனபின்னர் போற்றப்பட்டான். புத்தமதம் போன்றஆழமானமதத்தைபுரிந்துகொள்ளக் கூடியஅவர்கள் அறிவாளிகளாக இருந்தவர்கள் என்றவகையில் அவர்கள் வளர்ந்தகலாசாரத்தைகொண்டவர்களாக இருந்திருக்கலாம் எனக் கொள்ளலாம்

புத்தபெருமான் இலங்கைவருகையின் போதுபதுளைமாவட்டத்தில் இன்னுமொருவிசேட இடமாவதுவரலாற்றுசிறப்புமிக்க இடமாவதுபதுளைமுத்தியங்கனைவிகாரைஅமைந்துள்ள இடமாகும். புத்தபெருமான் மூன்றாவதுமுறையாக இலங்கைவந்தபோதுகளனிவிகாரையில் சிறிது இளைப்பாறியதாக கூறப்படுகின்றது. இந்த இடத்தில் இந்திக்கஎன்னும் மக்கள் தலைவன் போதனைகளைகேட்டுவழிபாடுகளைமேற்கொள்வதற்காகஏதேனும் கேட்டபோதுபுத்தபிரான் வியர்வைதுளிகளைகொடுத்ததாகவும் சிறிது நேரத்தில் அவைமுத்துக்களாகமாறியதாகவும் அம்முத்துக்களைவைத்துநிர்மானிக்கப்பட்டதாகமுத்தியங்கனைஎனபிரசித்திபெற்றுள்ளது. நமுனுகுலைக்குஅதிபதிதேவனாக இவர் பின்னாளில் போற்றப்பட்டார்.

பதுளைமாவட்டத்தின் அமைவு


இலங்கைமத்தியமலைநாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பதுளைமாவட்டம் மாறுபட்டபூகோளவியல் பிரதேசமாக இனங் காணலாம். வடக்குமற்றும் தெற்குதிசையில் உள்ளமலைத் தொடர்கள் மற்றும் அவற்றுக்கிடையில் உள்ளபள்ளத்தாக்கு,பூகோளகாட்சிசமஉச்சிமத்தியமலைநாட்டின் தெளிவானஉலர் வலயபிரதேசமாக இருத்தல்,தீவின் திரள் முகிழ்கள் உருவாவதற்குஏதுவானபிரதேசமாகஉள்ளமைமலைஅரண் மற்றும் பாரியபள்ளத்தாக்குகளால் சூழ்ந்துள்ளமைபோன்றபூகோளவியல் காரணிகளால் பிரதேசத்திற்குதனித்துவத்தை பெற்றுக்கொடுக்கிறது.

வடக்கில் தும்பரைபள்ளத்தாக்கிலும் கிழக்குமற்றும் தெற்கில் உயர்ந்த மலைமேடுகளினாலும் மேற்கில் மத்தியமலைகளின் எல்லைகளாலும் சூழப்பட்ட இப்பிரதேசமானது ஒரு பள்ளத்தாக்காகும். இவ் பதுளைபள்ளத்தாக்கானதுமத்தியமலைநாட்டின் அதிகபள்ளத்தாக்கானபிரதேசத்தில் அமைந்து இருப்பதோடு,வடமேற்குஎல்லையில் அமந்துள்ள இராகலைமேட்டுநிலத்தில் இருந்துபடிமுறையாக இறங்கும் போதுபள்ளத்திற்குள் நுழையலாம். இதன் உயரம் 1400 மீற்றர்களாகும். வெலிமடைபள்ளத்தாக்கு,பதுளைபள்ளத்தாக்கு,நமுனுகுலைமற்றும் மடுல்சீமைமலைத் தொடர் கிழக்குமற்றும் தெற்கில் பிரதேசத்தில் திருத்தமானபௌதீகஅடையாளங்கள் அறிவியலை தூண்டுகிறது. ஹப்புத்தளைதொடர் பள்ளத்தாக்குதென்மேற்குஎல்லையில் அமைந்துள்ளது.


அறிவியல் ரீதியாகபதுளைமாவட்டத்தில் அதிகசிக்கல் நிறைந்துள்ளது. இச் சிக்கலானபள்ளத்தாக்கினூடாகஓடும் நதிகள் பாசானங்கள் அமைந்தபிரதேசங்கள் மற்றும் சூழலியல் மாற்றத்தினால் ஏற்பட்டநீர்அமைப்புகளின் ஊடாகபாயும் போதுநீர் வீழ்ச்சிகளைஏற்படுத்துகிறது. ஊமாஓயாவின் மேற்குகிளையின் ஊடாககுருந்துஓயவீழ்ச்சிபதுளுஓயாவின் துன்ஹிந்தவீழ்ச்சிகிரிந்திஓயாஆரம்பிக்கும் பிரதேசத்தில் தியலுமைநீர்வீழ்ச்சிமற்றும் இராவணாஎல்லநீர்வீழ்ச்சி இது போன்றுஉருவானநீர் வீழச்சிகளுக்குஉதாரணமாகும். எவ்வாறெனினும் பொதுவாகபதுளையைநோக்கும் போதுநீர்ஊற்றுமற்றும் நீர் வழியும் முறைமையேகாணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் தெற்கில் மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களும் வடக்கில் அம்பாறை கண்டி மாவட்டங்களும் மேற்கில் நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களும் எல்லைகளாக இருக்கும் பதுளைமாவட்டம் இலங்கை தீவின் 2861 மைல்களை கொண்ட அழகிய பூமி பிரதேசமாகும்.

மாவட்ட வரைபடம்


Mahiyanganaya
Rideemaliyadda
Kandaketiya
Meegahakivula
Soranathota
Lunugala
Badulla
Passara
Uva Paranagama
Hali Ela
Welimada
Ella
Bandarawela
Haputhale
Haldummulla

நிர்வாக அமைப்பு



பதுளை மாவட்டம்


பிரதேச செயலக பிரிவுகள் - 15

கிராம அலுவலர் பிரிவிகள்-567

நகரம் | கிராமம் | தோட்டம்

பதுளை மாவட்டத்தின்பிரதேச செயலக பிரிவுகள்

பதுளை மாவட்ட செயலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பிரதேச செயலக பிரிவுகள் 15 ஆகும். இவ் பிரதேச செயலக பிரிவுகள் 15ற்குள் கிராமஅலுவலர் பிரிவுகள் 567 ம், கிராமங்கள் 1996ம், தோட்டங்கள் 186ம் அமைந்துள்ளது. உள்ளூராட்சி தொகுதி மட்டத்தில் எடுக்கும் போதுபிரதேசசபைகள் 15ம் ,01 நகரசபையும், 02 மாநகரசபைகளும் காணப்படுகின்றன.



பிரதேச செயலக பிரிவுகளின் அமைவிடம்

பிரதேசசெயலகப் பிரிவுகள்	அமைவிடம்	மாவட்ட செயலகத்தில் இருந்தான (கி.மீ)
மஹியங்கனை	மஹியங்கனை – ஹசலக வீதி கம் உதாவ பூமி பரப்பில்	65.0
ரிதீமாலியத்த	ஆந்தாஉல்பத பிபில வீதி7 கி.மீ தூரத்தில்	53.0
மீகஹகிவுல	பதுளை மஹியங்கனை வீதி மீகஹகியுல நகரின் அருகில்	23.0
கந்தகெடிய	21 சந்தி- கலஉட வீதி 5 கி.மீ	39.0
சொரணாதொட	பதுளை - மஹியங்கனை வீதியில் ரிதீபான	2.0
பதுளை	பதுளை கச்சேரி உள்ளக வீதி	0.0
பசறை	பசறை வீதிக்கு அருகில்	20.0
ஹாலிஎல	பதுளை - ஹாலிஎல வீதிக்கு 5 கி.மீ. தூரத்தில்	7.0
வெளிமடை	வெளிமடை நகரின்பஸ் தரிப்பிடம்	32.0
ஊவாரணகம	ஊவாபரணகம-லுணுவத்த உப நகரம்	45.0
பண்டாரவளை	பண்டாரவளை நகர சபை வீதியின் முன்னால்	28.0
எல்ல	கும்பல்வெல - வெல்லவாய வீதியின் எல்ல வீதியின் உள்ளே	23.0
ஹப்புதளை	தியதலாவ நகர மத்தியில்	36.0
ஹல்துமுல்ல	பெரகல - பலாங்கொட வீதி	52.0
லுனுகல	பசறை - பிபில வீதி லுணுகல வீதிக்கு அருகில்	40.0

பிரதேச செயலக பிரிவுகளின்
கிராம பிரிவு / நிலப்பரப்பளவு /கிராமங்களின் எண்ணிக்கை


இல	பிரதேச செயலக பிரிவுகள்	கிராம பிரிவுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலக பிரிவுகளின் நிலப்பரப்பளவு (கி.மீ)	கிராமங்களின் எண்ணிக்கை
1	மஹியங்கனை	35	601	201
2	ரிதீமாலியத்த	42	431	170
3	மீகஹகிவுல	20	105	101
4	கந்தகெடிய	26	157	104
5	சொரணாதொட	25	79	134
6	பதுளை	29	51	201
7	ஹாலிஎல	57	165	317
8	எல்ல	32	111	205
9	பண்டாரவளை	35	71	156
10	ஹப்புதளை	26	72	120
11	ஹல்துமுல்ல	39	412	227
12	வெளிமடை	64	188	295
13	ஊவாரணகம	68	138	401
14	பசறை	41	136	179
15	லுனுகல	28	144	113
மொத்தம்		**567**	**2,861**	**2,924**

ஆதாரம்–மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- 2022

பிரதேசசெயலகபிரிவின்அடிப்டையில்சனத்தொகை

பிரதேச செயலகப் பிரிவு	பிரிவு		
	நகர்ப்புற	கிராமம்	தோட்டம்
மஹியங்கனை	3,990	90,058	0
ரிதீமாலியத்த	0	64,800	94
மீகஹகிவுல	0	23,116	2,543
கந்தகெடிய	1,119	26,487	1,092
சொரணாதொட	567	21,783	4,752
பதுளை	47,096	28,313	11,281
ஹாலிஎல	1,385	70,982	33,001
எல்ல	594	37,721	15,292
பண்டாரவளை	25,549	37,707	10,687
ஹப்புதளை	5,267	31,577	21,672
ஹல்துமுல்ல	1,411	25,695	19,088
வெளிமடை	0	105,245	12,902
ஊவாரணகம	567	79,665	13,318
பசறை	1.972	32,160	22,654
லுனுகல	0	17,962	23,216
மொத்தம்	**89,517**	**693,271**	**191,592**


ஆதாரம் –மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- 2022



பிரதேச செயலக மட்டத்தில் பாலின அடிப்படையில் மக்கள் தொகை

தொ.இல	பிரதேச செயலகப் பிரிவு	ஆண்	பெண்	மொத்தம்
1	மஹியங்கனை	46,327	47,721	94,048
2	ரிதீமாலியத்த	32,136	32,758	64,894
3	மீகஹகிவுல	12,549	13,110	25,659
4	கந்தகெடிய	14,206	14,492	28,698
5	சொரணாதொட	13,339	13,763	27,102
6	பதுளை	45,431	41,259	86,690
7	ஹாலிஎல	54,816	50,552	105,368
8	எல்ல	26,383	27,224	53,607
9	பண்டாரவளை	35,930	38,013	73,943
10	ஹப்புதளை	28,483	30,033	58,516
11	ஹல்துமுல்ல	22,361	23,833	46,194
12	வெளிமடை	60,375	57,772	118,147
13	ஊவாரணகம	46,139	47,411	93,550
14	பசறை	27,991	28,795	56,786
15	லுனுகல	20,261	20,917	41,178
மொத்தம்		**486,727**	**487,653**	**974,380**

ஆதாரம் - மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- 2022



பிரதேசசெயலக மட்டத்தில் வயது அடிப்படையில் சனத்தொகை


தொ.இல	பிரதேச செயலகப் பிரிவு	வயதுபிரிவு (வருடம்									மொத்த சனத் தொகை
		0-5	06-10	11-13	14-17	18-25	26-35	36-55	56-60	61 மேல்	
1	மஹியங்கனை	6,771	8,628	6,815	8,383	11,498	13,419	21,732	7,391	9,411	94,048
2	ரிதீமாலியத்த	4,834	5,528	3,855	4,940	7,022	10,061	16,934	4,859	6,861	64,894
3	மீகஹகிவுல	1,886	2,087	1,451	1,752	3,401	3,955	5,944	2,061	3,122	25,659
4	கந்தகெடிய	2,073	2,328	1,684	1,865	2,998	5,066	7,268	1,914	3,502	28,698
5	சொரணாதொட	1,691	2,312	1,763	2,143	3,029	3,836	6,289	2,270	3,769	27,102
6	பதுளை	5,421	5,813	4,275	6,132	9,834	13,275	21,708	7,713	12,519	86,690
7	ஹாலிஎல	6,865	7,089	4,253	8,809	13,514	15,786	25,633	6,408	17,011	105,368
8	எல்ல	3,335	4,475	3,160	4,441	5,112	7,909	13,833	3,653	7,689	53,607
9	பண்டாரவளை	4,336	5,251	4,134	4,815	9,334	10,738	15,941	8,163	11,231	73,943
10	ஹப்புதளை	4,011	4,510	4,393	5,120	6,445	8,235	12,430	4,919	8,453	58,516
11	ஹல்துமுல்ல	2,575	3,764	2,929	3,449	5,201	6,546	10,686	4,209	6,835	46,194
12	வெளிமடை	7,665	8,275	6,855	8,150	12,840	16,873	30,791	11,505	15,193	118,147
13	ஊவாரணகம	5,773	6,857	5,350	6,932	10,809	13,442	22,535	8,083	13,769	93,550
14	பசறை	3,078	4,116	3,326	4,177	6,931	8,449	12,950	4,947	8,812	56,786
15	லுனுகல	2,734	3,504	2,507	3,264	4,603	6,814	8,697	3,172	5,883	41,178
மொத்தம்		**63,048**	**74,537**	**56,750**	**74,372**	**112,571**	**144,404**	**233,371**	**81,267**	**134,060**	**974,380**

ஆதாரம்- மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- **2022**

பிரதேச செயலக பிரிவுகளின் அடிப்படையில் பிறப்பு, இறப்பு, விவாகமானவர் எண்ணிக்கை

தொ.இல	பிரதேச செயலகப் பிரிவு	பிறப்பு		இறப்பு			திருமணமானோர்	
		ஆண்	பெண்	சிசு மரண வீதம்	ஆண்	பெண்	சாதாரண	முஸ்லிம்
1	மஹியங்கனை	705	726	22	177	99	356	14
2	ரிதீமாலியத்த	377	421	3	150	135	398	-
3	மீகஹகிவுல	119	140	3	78	77	147	-
4	கந்தகெடிய	135	154	2	92	70	92	-
5	சொரணாதொட	105	116	5	98	73	133	46
6	பதுளை	400	460	2	194	165	233	28
7	ஹாலிஎல	440	508	6	404	328	484	99
8	எல்ல	247	251	4	223	178	192	27
9	பண்டாரவளை	359	294	1	194	187	257	45
10	ஹப்புதளை	303	349	1	111	92	201	59
11	ஹல்துமுல்ல	250	291	8	117	109	192	3
12	வெளிமடை	591	597	4	380	290	431	189
13	ஊவாரணகம	375	394	3	291	295	395	27
14	பசறை	232	268	1	161	121	234	37
15	லுனுகல	177	178	2	125	91	127	10
	மொத்தம்	**4,815**	**5,147**	**67**	**2,795**	**2,310**	**3,872**	**584**


ஆதாரம் - மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- 2022



பிரதேச செயலகப் பிரிவுகளின்படி
வேலை செய்யும் மற்றும் வேலையற்றமக்கள் தொகை

இல	பிரதேச செயலகப் பிரிவு	வேலையற்ற மக்கள் தொகை	வேலையில் உள்ள மக்கள் தொகை
1	மஹியங்கனை	16,517	46,620
2	ரிதீமாலியத்த	14,116	29,386
3	மீகஹகிவுல	4,782	12,829
4	கந்தகெடிய	5,268	14,886
5	சொரணாதொட	7,101	10,438
6	பதுளை	10,752	42,545
7	பசறை	19,607	51,990
8	ஹாலிஎல	10,845	25,204
9	வெளிமடை	6,505	28,724
10	ஊவாரணகம	10,134	25,297
11	பண்டாரவளை	10,423	18,589
12	எல்ல	31,465	51,077
13	ஹப்புதளை	17,223	50,107
14	ஹல்துமுல்ல	20,762	18,168
15	லுனுகல	11,414	17,462
	மொத்தம்	**196,914**	**443,322**


ஆதாரம்–மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- 2022



வீட்டு அலகு கட்டமைப்பின் அடிப்படையில்பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் உள்ள குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை

இல	பிரதேச செயலகப் பிரிவு	ஒற்றை மாடி வீடுகள்	இரண்டு மாடி தனி வீடுகள்	இரண்டு தளங்களுக்கு மேல் கொண்ட தனி வீடுகள்	இணைப்பு (ANNEX)	குடியிருப்புகள்	குடில்கள் / வீடுகள் / சேரிகள்	வரிசை வீடுகள்	மொத்தம்
1	மஹியங்கனை	23,898	868	37	87	14	441	9	25,354
2	ரிதீமாலியத்த	17,160	255	10	36	2	180	8	17,651
3	மீகஹகிவுல	5,947	201	2	-	-	57	723	6,930
4	கந்தகெடிய	7,139	256	3	4	-	261	115	7,778
5	சொரணாதொட	6,101	316	21	86	64	33	598	7,219
6	பதுளை	13,944	3,936	393	1,011	926	203	1,523	21,936
7	ஹாலிஎல	21,430	1,347	133	63		68	4,886	27,927
8	எல்ல	10,794	850	173	34	31	23	1,925	13,830
9	பண்டாரவளை	15,291	1,862	210	365	29	104	1,957	19,818
10	ஹப்புதளை	8,682	1,416	120	200	228	105	2,965	13,716
11	ஹல்துமுல்ல	9,303	385	33	46	4	316	2,411	12,498
12	வெளிமடை	24,885	1,586	158	201	69	228	1,548	28,675
13	ஊவாரணகம	21,006	837	22	198	-	179	2,185	24,427
14	பசறை	9,556	918	34	98	3	82	3,423	14,114
15	லுனுகல	6,790	143	13	6	-	106	2,861	9,919
	மொத்தம்	**201,926**	**15,176**	**1,362**	**2,435**	**1,370**	**2,386**	**27,137**	**251,792**

ஆதாரம்–மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- 2022



மாவட்டத்தின் நிலப்பயன்பாடு

நிலத்தின் இயல்பு	நில அளவு (ஹெக்டேர்)	சதவிதம்
கட்டப்பட்ட நிலம்	3,588	1.25
தோட்டம்	69,785	24.39
தேயிலை	29,668	10.37
இறப்பர்	1,793	0.63
தேங்காய்	65	0.02
நெற் பயிர்ச்செயகை	41,911	14.65
பிற வற்றாத பயிர்கள்	10,597	3.70
வயல் பயிர்கள் (பருவகால பயிர்கள்)	14,135	4.94
மற்ற பயிர்கள் (கருவாப்பட்டை, மா, மிளகு, பூ வளர்ப்பு, வாழை)	679	0.24
கைவிடப்பட்ட வயல் நிலம்	132	0.05
கைவிடப்பட்ட தேயிலை தோட்டங்கள்	102	0.04
காடு	50,079	17.50
பற்றை காடு	28,158	9.84
புல்வெளி	8,182	2.86
காட்டு பயிர்ச்செயகை	9,627	3.36
சதுப்பு நிலங்கள்	42	0.01
நீர்த்தேக்கங்கள்	11,269	3.94
பாறைகள்	5,983	2.09
வெற்று நிலம்	305	0.11
மொத்தம்	**286,100**	**100.00**

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு/ பணிக்கூற்று / குறிக்கோள்கள்

தூரநோக்கு

"பிரஜைகளின் திருப்தியின் ஊடாக நிரந்தர அபிவிருத்தியை நோக்கி பிரதேச நிர்வாகத்தை செயற்படுத்தும் செயற்பாட்டாளர்"

பணிக்கூற்று

மாவட்டம் மற்றும் அங்குள்ள மக்கள் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வகையில் நிரந்தர அபிவிருத்தியை நோக்கி அரச கொள்கைகளுக்கு அமைவாக திட்ட்மிடலுடன் வளங்கள் மற்றும் நிறுவனங்களை உற்பத்தித் திறனுடையதாக செயற்படுத்தும் சிறந்த இணைப்பின் ஊடாக மக்களின் தேவைகளை நியாயமானதாகவும் சாதாரணமாகவும் நட்புடன் நிறைவேற்றல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

- அரச நிர்வாக அமைச்சு மற்றும் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.

- அரசின் அனைத்து அமைச்சு மற்றும் திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பினை பேணி ஒப்படைக்கப்படும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

- அரச மற்றும் மாகாண சபையினால் ஒப்படைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கான வருமானங்களை சேகரித்தல்.

- மாவட்டத்தின் பிரதேச செயலகங்களை ஒருங்கிணைப்பு செய்தல் மேற்பார்வையிடல் மற்றும் நிர்வாகத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை கொண்டு செல்லல்.

- மாகாண சபைக்குரிய விடயங்களை ஒருங்கிணைப்பு செய்தல்.

- தேர்தல்களை நடாத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டம் உட்பட அரசின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் ஒப்படைக்கப்படும் ஏற்பாடுகளின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் உள்ளடங்களாக பல்வேறு விடயங்களுக்காக ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை கொண்டு செல்லல்.

- மாவட்டத்தின் அனைத்து அரசமத மற்றும் கலாசார போன்ற விழாக்களை ஏற்பாடு செய்தல்.

- சிவில் அமைப்புக்கள்அரச சார்பற்ற அமைப்புபொது மக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கிடையில் இணைப்பு செய்வதற்காக பங்களிப்பு செய்தல் மற்றும் பொது சமூக விடயங்களை தீர்த்து வைப்பதற்காக இடையீடு செய்தல்


அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கான மேற்கொள்ளப்படும் பிரதான விடயங்கள்

- கிராம அபிவிருத்தி கருத்திட்டங்களை செய்படுத்துதல்.
- சமூக மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- ஓய்வூதியத்தை செயற்படுத்துதல்.
- சமூர்த்தி வேலைத்திட்டத்தை செயற்படுத்தல்.
- இடர் முகாமைத்துவ வேலைத்திட்டத்தை செயற்படுத்தல்.
- காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை
- பிறப்பு இறப்பு திருமண பதிவு நடவடிக்கைகள்
- காணி தொடர்பான ஏனைய நடவடிக்கைகள்
- வாகன வருமான அனுமதி பத்திரங்களை விநியோகத்தில் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்
- அங்கவீனர்களுக்கான பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்
- சமூக சேவை நடவடிக்கை
- கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- கிராமிய மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- சுகாதார வேலைத் திட்டம்
- சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி வேலைத்திட்டம்
- தேசிய பாதுகாப்பு வேலைத்திட்டம்
- விவசாய வேலைத்திட்டம்
- சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டம்

உட்பட பல்வேறு வேலைத்திட்டங்கள் இவ்வலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக மாகாண சபைக்குரிய பல்வேறு வேலைத்திட்டங்கள் பிரதேச செயலகங்களின் தலையீட்டில் செயற்படுத்தப்படுகின்றது.

- கிராமிய வீதி அபிவிருத்தி கருத்திட்டம்
- மின் மற்றும் நீர் கருத்திட்டம்
- கட்டிட நிர்மாணம்
- வேறு சமூக சேவைகள் கருத்திட்டம்

1.4 நிறுவன விளக்கப்படம்



1.5 மாவட்ட செயலகங்களின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

இல.	பிரதேச செயலாளர் பிரிவுகள்	கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை	பிரிவில் உள்ள காணியின் பரப்பளவு (ஹெக்டயார்) (Km ^{2})	கிராமங்களின் எண்ணிக்கை
1	மஹியங்கனை	35	601	201
2	ரிதீமாலியத்த	42	431	170
3	மீகஹகிவுல	20	105	101
4	கந்தகெடிய	26	157	104
5	சொரணாதொட	25	79	134
6	பதுளை	29	51	201
7	ஹாலிஎல	57	165	317
8	எல்ல	32	111	205
9	பண்டாரவளை	35	71	156
10	ஹப்புதளை	26	72	120
11	ஹல்துமுல்ல	39	412	227
12	வெளிமடை	64	188	295
13	ஊவாரணகம	68	138	401
14	பசறை	41	136	179
15	லுனுகல	28	144	113
மொத்தம்		**567**	**2,861**	**2,924**

ஆதாரம்–மாவட்ட செயலகத்தின் வளவிபரம்- **2022**

1.6 மாவட்ட செயலகநிறுவன நிதியம்

நிதி				
குறியீட்டு இலக்கம்	விபரம்	மொத்த ஒதுக்கீடு ரூ.	உண்மை செலவு ரூ.	செலவு சதவீதம் %
11	தேசிய நிதி	1,598,207,000	1,491,622,097.72	93%

அத்தியாயம்02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 முன்னேற்றம்


2.2 சிறப்பு அடைவுகள்

2.3 சவால்கள்

2.4 எதிர்கால இலக்குகள்

2.1 முன்னேற்றம்

2023 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தகவல்கள்			
காரணம்	**இலக்கு**	**தேர்ச்சி**	
		இலக்கத்தில்	**சதவீதமாக**
வாகன வருவாய் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்	147,800	118,172	80%
பதிவாளர் பிரிவு மூலம் சான்றிதழ்களை வழங்குதல்	199,640	214,452	107%
தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல்	22,950	23,132	101%
வியாபார பெயர் பதிவு	1,330	1,398	105%
மின் சோதனைகளை நடாத்துதல்	123	71	58%



2023 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தலின் முன்னேற்றம்

சௌபாக்கிய உற்பத்தி கிராமம் மேம்படுத்தல் வேலைத்திட்டம்

பிதேச செயலகப் பிரிவு	அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப் பட்ட தொகை ரூ.	திட்ட நிறைவு புள்ளிவிபரங்கள்	நிதி முன்னேற்றம் ரூ.	சதவீதம் (அனுமதிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக)
மஹியங்கனை	1	9,020,000.00	1	9,020,000.00	100%
எல்ல	1	143,500.00	1	143,500.00	100%
மொத்தம்	**2**	**9,163,500.00**	**2**	**9,163,500.00**	

உடதியலும எல்ல சுற்றுலாத்துறை இடங்களை அபிவிருத்தி செய்தல்

பிதேச செயலகப் பிரிவு	அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப் பட்ட தொகை ரூ.	திட்ட நிறைவு புள்ளிவிபரங்கள்	நிதி முன்னேற்றம் ரூ.	சதவீதம் (அனுமதிக்கப்பட்ட தொகையின் சதவீதமாக)
ஹல்துமுல்ல	1	2,800,000.00	1	2,613,164.30	100%

உலக உணவுவேலைத்திட்டம்

பிரதேச செயலகப் பிரிவு	தேர்நதெடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்க	உணவுபொருட்களின் அளவு		வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை	விகிதாசாரம்(அங்கீகரிக்கப்பட்டநிதியில் விகிதாசாரம்
		பருப்பு (20 kg)பொதி	எண் ணெய்(கொள் கலன்		
எல்ல	3600	3600	3600	3600	100%
கந்தகெட்டிய	3246	3246	3246	3246	100%
மீகஹகிவுல	1958	1958	1958	1958	100%
சொரணதொட்ட	2605	2605	2605	2605	100%
ஹாலிஎல	4161	4161	4161	4161	100%
பசறை	2047	2047	2047	2047	100%
லுனுகல	1881	1881	1881	1881	100%
ஊவாபரணகம	4655	4655	4655	4655	100%

புதியகிராமம்புதியநாடுதேசியஒருங்கிணைந்தபங்களிப்புஅபிவிருத்திவேலைத்திட்டம்

பிரதேச செயலகப் பிரிவு	நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம்	வழங்கப்பட்ட ஒதுக்கீடு	நிறைடைந்த வேலைத்திட்டம்	நிதி முன்னேற்றம்	அங்கீகரிக்கப்பட்ட நிதியின் விகிதாசாரம்
பதுளை மாவட்டத்தின் பிரதேச செயலகப் பிரிவுகள் 15	1. போஷாக்கான தோட்டங்களை உருவாக்கல் 2 சமூக பங்களிப்புடன் நெல் வயல்களில் கால்வாய் அணைகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி 3. திட்ட பிரதேசத்தில் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கிராமப்புற சிறு பாதைகளின் அபிவிருத்தி 4.அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் 5. ஆலோசனை சேவைகளை வழங்கல் 6. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய வெளி நிறுவனங்களின் உதவியை நாடுதல் 7. விலங்குணவு உற்பத்தி அதிகரிப்பு வேலைத்திட்டங்கள் 8. நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்கள் 9. நடமாடும் விற்பனை சந்தை அமைப்புகள் 10. மேலதிக உணவுப் உற்பத்தி பொருட்களை பரிமாறிக்கொள்ள ஏற்பாடு செய்தல் 11. ஊட்டச்சத்து குறைபாடுள்ள பாடசலை மற்றும் முன்பள்ளி குழந்தைகளுக்கான வேலைத்திட்டங்கள் 12.காணிகளை பெற்றுக்கொடுத்தல் 13. விவசாயம் மற்றும் சுயதொழில் பயிற்சி திட்டங்கள் 14.சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் 15. பயிரிடப்படாத நிலத்தில் பயிரிடுதல் 16. சுகாதார திட்டங்களை செயல்படுத்துதல் 17. ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு திட்டங்கள் 18.ஏனைய திட்டங்கள்	13,506,211.00	அடையாளம் காணப்பட்ட முன்மொழிவுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.	13,506,211.00	100%

2023 ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தில்

நடைமுறைப்படுத்தப்பட்டசில கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின் பெயர் - நன்னீர் மீன்வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்





வேலைத்திட்டம்	-	செழிப்பு உற்பத்தி கிராமஅபிவிருத்தித் திட்டம் - 2023
கருத்திட்டம்	-	நன்னீர் மீன்வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்
பி.செ.பிரிவு	-	மஹியங்கனை
கி.உ.பிரிவு	-	ரத்கிந்த ,திவுபெலஸ்ஸ, கிராந்துருகோட்டை
ஒதுக்கீட்டுத்தொகைரூ.மி	-	9. 02
செலவு ரூ.மி	-	9.02

2.2 சிறப்பு அடைவுகள்

- செழிப்பு. உற்பத்தி கிராமம் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 18 கருத்திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்துதல்
- உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் 103 கருத்திட்டங்களை செயல்படுத்தல்
- உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் 24153 பேருக்கு பயன்களை பெற்றுக்கொடுத்தல்
- சமுர்த்தி வீடமைப்பு திட்டத்தின் கீழ் 94 புதிய வீடுகளை நிர்மாணித்தல்
- அனைத்து கிராம உத்தியோகபூர்வ களங்களையும் உள்ளடக்கி பதுளை மாவட்டத்தில் அனர்த்த இடர் குறைப்பு முயற்சிகளை நடைமுறைப்படுத்துதல் என்ற கருத்தின் அடிப்படையில், கிராம மக்கள், அரசு, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒருங்கிணைத்து ரூ. 53,072,397.40 மதிப்புள்ள 577 கருத்திட்டங்கள் சமூக பங்களிப்பில் நடைமுறைப்படுத்தியமை.
- பதுளை மாவட்ட செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களில் மொழிப் புலமை பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கையை குறிப்பிட்ட காலத்திற்குள் 100% ஆக உயர்த்துதல்.
- மாவட்டத்தில் 325.51 சதுர கிலோமீட்டருக்கு அளிப்புப்பத்திரம் அல்லது பத்திரமொன்றை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளல்
- அனர்த்த மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தின் கீழ் நீட்வூட் பிரதேசத்தில் 33 குடும்பங்கள் மீள்குடியேற்றம்.
- மஹியங்கனை மற்றும் ஹலி-எல பிரதேச செயலகங்களுக்கு புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல்



ஹலி-எல பிரதேச செயலகம்

2.3 சவால்கள்

- நாட்டில் பொருளாதார ஸ்திரமின்மை
- இப்பிரதேச மக்களிடையே தங்கி வாழும் மனப்பானமை அதிகமாக நிலவுகின்றமை
- மாவட்டத்தை பாதிக்கும் இயற்கை சீற்றங்கள் இருப்பது.
- மாவட்டத்தில் திறமையான தொழிலாளர்கள் பற்றாக்குறை
- மாவட்டத்தில் பெரும்பாலும் தொழிலாளர்களின் இடம்பெயர்வு
- பிரதேச செயலகங்களில் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை

2.4 எதிர்கால இலக்கு

- பதுளை மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளை உரிய முறையில் இனங்கண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையான முறையில் முன்னெடுப்பது

- மாவட்டத்தில் உள்ள வளங்களை அதிகபட்சமாகப் பயன்படுத்தி பொருளாதார, சமூக மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயல்முறையை விரைவுபடுத்துதல்
- தொழில்நுட்ப அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மை கொண்ட சமுதாயத்தை உருவாக்க அடிப்படை நடவடிக்கைகளை எடுத்து அதன் மூலம் மாவட்டத்தின் தொழிலாளர் சக்தியை வலுப்படுத்துதல்.
- காலநிலை மாற்றம், இயற்கை சீற்றங்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை குறைப்பதன் மூலம் உயிர் மற்றும் உடமை இழப்புகளை குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- சமூக மட்டத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தன்னிறைவு ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை புதுமைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- மாவட்டத்தில் உள்ள சமூக உணவுப் பாதுகாப்பு மற்றும் நல்ல ஊட்டச்சத்து நிலையை அடைய ஒருங்கிணைந்த விவசாய அணுகுமுறையை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மாவட்டத்தில் வணிகம் ஒன்றின் செயல்பாடுகளை நவீனமயமாக்கி, அவர்களுக்குத் தேவையான முறையான வழிகாட்டுதலின் மூலம் மாவட்டத்தின் வணிகர்களை ஏற்றுமதிச் சந்தைக்கு அழைத்துச் செல்வதற்கான வழிமுறையைத் தயாரித்தல்.

- அருணோதய திட்டத்தின் கீழ், மாவட்டம் முழுவதிலும் உள்ள அனைத்து கிராம அதிகாரிகளின் களங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2835 குடும்பங்களின் பொருளாதார வலுவூட்டலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மாவட்டத்தில் தற்போதுள்ள சுற்றுலா மதிப்புமிக்க இடங்களை மேம்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பது.

- மாவட்டத்தில் பயன்படுத்தப்படாத நிலங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் நில பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்.

- டிஜிட்டல் மயமாக்கலின் அடிப்படையில் பொதுமக்களுக்கான சேவைகளை நெறிப்படுத்துதல்
- பெருந்தோட்ட சமூகத்தின் தொழில்சார் மற்றும் முறையான கல்வியின் தரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- தோட்ட சமூகத்தினரின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கல்வியறிவை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இயற்கைச் சூழல், நீரேந்து பகுதிகள், நிலம் மற்றும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாக்க சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.



பண்டுக ஸ்ரீ பிரபாத் அபேவர்தன
மாவட்ட செயலாளர்/அரச அதிபர்
பதுளை நிர்வாக மாவட்டம்

அத்தியாயம்03

வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதி சார் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை கூற்று

3.2 நிதி நிலைமைக் கூற்று

3.3 நிதி கிடைப்பனவு தொடர்பான கூற்று

3.4 நிதி வெளிப்படுத்தல் குறிப்புகள்

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் அடிப்படையில் வேறு அமைச்சு/ திணைக்களங்களின் முகவராக மாவட்ட செயலகசெலவினத்திற்கான ஒதுக்கீடு

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

3.9 கணக்காய்வாளரின் அறிக்கை

3.1 நிதி செயலாற்றுகை கூற்று

எசீஎ- எப்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2023		குறிப்பு	உண்மை நிலை 2023	உண்மை நிலை 2022	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஎ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்				
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		4,497,402,360	4,093,327,000	ஏசீஎ-3
-	வைப்புகள்		414,935,949	255,885,990	ஏசீஎ-4
-	முற்பணக் கணக்குகள்		69,113,927	65,021,846	ஏசீஎ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		4,981,452,237	4,412,234,835	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		4,981,452,237	4,412,234,835	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		7,000,000	49,938,000	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		4,974,452,237	4,362,296,835	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
-	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	964,452,375	795,622,763	
-	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	140,093,999	110,779,096	ஏசீஎ-2(ii)
-	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	280,833,059	12,297,452	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
-	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		1,385,379,433	918,699,311	
	மூலதனம் செலவினம்				
-	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	22,550,440	18,676,179	
	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	83,497,029	33,302,066	
-	மூலதன மாற்றல்கள்	12			ஏசீஎ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13			
-	திறன் விருத்தி	14	195,195	207,765	
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15		321,242,432	
-	மொத்த மூலதனம் செலவினம் (எ)		106,242,664	373,428,442	
	வைப்புக் கொடுப்பனவுகள்		474,437,258	301,491,444	ஏசீஎ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		71,039,476	53,282,305	ஏசீஎ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்				
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		545,476,734	354,773,749	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		2,037,098,831	1,646,901,502	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		2,937,353,405	2,717,395,333	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		2,937,353,405	2,717,395,334	ஏசீஎ-7
-	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஎ-3
			-	-	

1

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	2,788,508,113	2,697,975,039
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	180,992,894	179,067,346
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**2,969,501,007**	**2,877,042,385**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		40,654,100	(20,772,757)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		2,788,508,113	2,697,975,039
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	140,338,794	199,840,103
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3		
மொத்தப் பொறுப்புக்கள்		**2,969,501,007**	**2,877,042,385**

பக்க இலக்கம் 7 முதல் 23 வரை ஏசீஏ 2 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 24 முதல் 61 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான கணக்காளர் (பதில் கடமை)
பிரதீப் யசரத்ன	பண்டுக ஸ்ரீ பிரபாத் அபேவர்தன	ஜே.எம்.பி. சிறிவர்தன
செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	மாவட்ட செயலாளர்	
திகதி : 2024.02.20	திகதி 2024.02 18	திகதி : 2024.02 19

பிரதீப் யசரத்னா
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Panduka Sri Prabhath Abeywardhana
District Secretary / Government Agent
Badulla

J.M.P. Siriwardhana
Chief Accountant (Acct)
For Badulla District Secratory

3.3 நிதி கிடைப்பனவு தொடர்பான கூற்று

ஏசீஏ- சீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	186,931,818	212,718,848
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	4,497,402,360	4,093,327,000
முற்பணங்களை அறவிடல்	89,773,697	81,717,762
வைப்புக்களின் பெறுகை	414,935,999	256,129,354
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	5,189,043,874	4,643,892,964
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,101,009,249	905,164,359
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	280,833,059	12,297,452
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,103,063,227	2,928,121,915
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	7,000,000	49,938,000
முற்பணக் கொடுப்பனவு	116,458,366	73,396,714
வைப்புக் கொடுப்பனவு	474,437,308	301,546,083
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	5,082,801,209	4,270,464,523
